முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட்டு, அவர் சார்ந்திருக்கக்கூடிய மாவட்ட மக்களுடைய நலன் சார்ந்த கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

அடிப்படை வசதிகள்

***13275—திருமதி கு. உமா மகேஸ்வரி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, எட்டயபுரத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விளாத்திகுளம் தொகுதி, எட்டயபுரத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியினை மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி உமா மகேஸ்வரி அவர்கள் வினவியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 19 பேரூராட்சிகளில் ஒன்றாகும். இது தூத்துக்குடியிலிருந்து மதுரைக்குச் செல்லும் தேசிய நெடுஞ்

சாலையில், 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மகாகவி பாரதியார் பிறந்த ஊரான எட்டயபுரத்தில் பாரதியாரின் மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. இஸ்லாமியர் நூலான சீறாப்புராணம் இயற்றிய உமறுப்புலவரின் நினைவு இடமும் எட்டயபுரத்தில் அமைந்துள்ளது. எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் நினைவிடம் மற்றும் உமறுப்புலவரின் நினைவிடம் ஆகியவற்றிற்கு திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட உள்ளூர் பொது மக்கள் வார இறுதி நாட்களில் சென்று வருகின்றனர். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதில்லை. இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படும்பட்சத்தில், அதற்கான கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டு, சுற்றுலா ஆணையரின் பரிந்துரைக்குப்பின், சுற்றுலாத் துறையின் நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.*

திருமதி கு. உமா மகேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்காகவே வாழ்ந்து, அமைதி, வளம், வளர்ச்சி என்ற பாதையில் தமிழகத்தைக் கொண்டு சென்ற, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி, இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் மக்கள் நல ஆட்சியைச் சிறப்புடன் முன்னெடுத்து செல்லும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். விளாத்திகுளம் தொகுதி, எட்டயபுரத்தில் மகாகவி பாரதியார், சீறாப்புராணம் இயற்றிய உமறுப்புலவர், இசை மேதை முத்துசாமி தீட்சிதர் போன்ற பெரியோர்களின் மணிமண்டபங்களை, நினைவிடங்களை, சுற்றுலாத் தலங்களைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் சகோதரி திருமதி உமா மகேஸ்வரி அவர்கள் எட்டயபுரத்தில் உள்ள மகாகவி பாரதியார், உமறுப்புலவர், முத்துசாமி தீட்சிதர் ஆகியோரின் நினைவிடங்களைப் போற்றும் வகையில் தோரண நுழைவு வாயில்* (Arch) *அமைத்துத் தர வேண்டும் என்று கோரியுள்ளார்கள். அதற்கான கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து பெறப்பட்டு, சுற்றுலாத் துறை ஆணையரின் பரிந்துரைக்குப்பின் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.*

திருமதி கு. உமா மகேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. பாரதியார், உமறுப்புலவர் மற்றும் முத்துசாமி தீட்சிதர் ஆகியோர்களின் பெயர்களில் மூன்று தோரண வாயில்கள் அமைக்க ஆவன செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் (குறுக்கீடு) நீங்கள் எவ்வளவு நேரம் கேட்டாலும் வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) நேரம் இருக்கும்போது வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

59—

தொழிற்பயிற்சி நிலையம்

***1752—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—